**தலைப்பு 9 – நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்கள் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொதுக் கட்டுப்பாட்டு நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு விடயப் பரப்பு

---

தலைப்பு 9 – நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூன் 08 ஆந் திகதி நியாயசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நியாயசபையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்கி செயற்படாதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 127(1)(அ) | சரியான மற்றும் நிதி ஒழுங்கு முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | மிகை நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டமை | 2.4. |
| | | பதவியணியினர் பயிற்றுவித்தல் போதியளவில் காணப்படாமை | 2.5 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் பரிசீலனைக்கு உட்படுத்தல். | கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் பொருத்தமான நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியாமை. | 2.2 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் அவர் தனது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு விடப்படுகின்றதெனவும் | அரசின் மதிப்பாளரின் வாடகையை விஞ்சி கட்டிட வாடகை கொடுப்பனவு | 2.3 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 அதிகாரசபையின் பிரதான செயற்பாடுகள்

அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பாகஅரசாங்க சேகைள் ஆணைக்குக்குழுவினால் தேசிய பொலிஸ் ஆணைக்குழு எனப்வற்றால் வழங்கப்படும் தீர்மானங்களுக்கும் கட்டளைகளும் எதிராக தொடுக்கப்படுகின்ற மேன்முறையீடுகள் புலனாய்வு செய்யப்பட்டு நியாயத்தை வழங்கல்.

### 2.2 பெற்றுக்கொண்ட மேன்முறையீடுகளுக்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்து பூர்த்தி செய்தல்

2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது 746 மேன்முறையீடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தன. மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்றிருந்த 415 மேன்முறையீடுகளுடன் 1161 மொத்த மேன்முறையீடுகள் பொருத்தமான நடவடிக்கைளை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தன. எனினும் ஆண்டின் இறுதிவரை அதில் 208 மேன்முறையீடுகள் மாத்திரம் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ஆண்டின் இறுதி அளவில் மேன்முறையீடுகள் (மீண்டும் அழைக்கப்பட்ட 05 மேன்முறையீடுகள் தவிர) 948 இன் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேன்முறையீடுகள் விசாரணை செய்யப்படும் நீதிமன்ற செயற்பாட்டின்போது எழும் கட்டுப்படுத்தமுடியாத நடைமுறை ரீதியான நிலைமையொன்றினால் கிடைக்கப்பெற்ற மேன்முறையீடு குறித்துரைக்கப்பட்ட காலப்பிரிவிற்குள் விசாரணை செய்து பொருத்தமான நடவடிக்கையொன்று எடுத்து பூர்த்திசெய்ய முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.3 அரச விலை மதிப்பாளரின் வாடகையை மிகைத்து கட்டிட வாடகை கொடுப்பனவு

2015 யூன் 01 ஆந் திகதி முதல் 03 வருடங்களான நீண்ட காலப்பகுதிக்காக மாதமொன்றிற்கு ரூபா 600,000 வாடகை கொடுப்பனவு அடிப்படையில் நியாயசபையின் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக கட்டிடமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதற்காக கொடுப்பனவு செய்ய வேண்டிய வாடகை தொடர்பாக அரச விலை மதிப்பாளரிடம் விசாரிக்கப்பட்டிருந்த போதிலும் அரச விலை மதிப்பாளரால் 2015 மே 05 ஆந் திகதி வரையிலும் அதிகாரசபையினால் செலுத்த வேண்டிய வாடகை தொடர்பான தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. நியாயசபையின் நடவடிக்கைகளை நிறைவேற்றுவது அவசர செயற்பாடொன்றாக கருதி அரச விலை மதிப்பாளரின் மதிப்பீட்டு வாடகையை அடிப்படையாக கொள்வதற்கு இயலுமான வகையில் கட்டிடத்தினை வாடகைக்கு எடுப்பதற்கு 2015 மே 06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சனாதிபதி செயலாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2016 சனவரி 12 ஆந் திகதி அரச விலை மதிப்பாளரால் அதன் மாதாந்த வாடகை ரூபா 350,000 என அறிவிக்கப்பட்டிருந்தது. சனாதிபதி செயலாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 03 ஆண்டுகள் போன்ற நீண்டகாலப்பகுதிக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமையால் மாதமொன்றுக்கு ரூபா 350,000 ஆன அரச விலை மதிப்பாளரின் வாடகையை விஞ்சி ரூபா 600,000 கொடுப்பனவு செய்ய உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டமையால் 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,750,000 தொகையும் 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 3,000,000 தொகையும் 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 3,000,000 மாக கூடுதலாக தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 2.4 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்.

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டு காலப்பகுதிக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 17.07 | 13.57 | 3.50 | 20.50 |
| | மூலதனம் | 0.91 | 0.87 | 0.04 | 4.40 |
| | மொத்தம் | **17.98** | **14.44** | **3.54** | **19.69** |
| 2014 | மீண்டெழுபவை | 16.62 | 14.62 | 2.00 | 12.03 |
| | மூலதனம் | 1.05 | 0.47 | 0.58 | 55.24 |
| | மொத்தம் | **17.67** | **15.09** | **2.58** | **14.60** |
| 2015 | மீண்டெழுபவை | 23.13 | 22.92 | 0.21 | 0.91 |
| | மூலதனம் | 1.20 | 0.56 | 0.64 | 53.33 |
| | மொத்தம் | **24.33** | **23.48** | **0.85** | **3.49** |
| 2016 | மீண்டெழுபவை | 22.20 | 21.19 | 1.01 | 4.55 |
| | மூலதனம் | 0.85 | 0.67 | 0.18 | 21.18 |
| | மொத்தம் | **23.05** | **21.86** | **1.19** | **5.16** |
| 2017 | மீண்டெழுபவை | 23.50 | 23.04 | 0.46 | 1.96 |
| | மூலதனம் | 0.85 | 0.54 | 0.31 | 36.47 |
| | மொத்தம் | **24.35** | **23.58** | **0.77** | **3.16** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை நிதி ஏற்பாடு**

அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் போது இரண்டு மூலதன விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாமல் அந்நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு நிதி ஏற்பாட்டில் 100 சதவீதம் மற்றும் 88 சதவீதமான அளவினை எடுத்திருந்தது.

## 2.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

மேற்படி 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளவாறான மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளர்வாண்டிற்காக மேன்முறையீட்டு சபையால் பதவியணிக்கான சம்பள செலவின விடயங்களுக்காக ரூபா 10.80 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 02 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 17 | 11 | 06 |
| (iv) | ஆரம்ப நிலை | 08 | 07 | 01 |
| | மொத்தம் | 31 | 21 | 10 |

**பதவியணியினரை பயிற்றுவித்தல் போதியதாக இல்லாதிருத்தல்**

-----------------------------------------------------------------------------------------------------------------

பதவியணியினரை உரிய வகையில் பயிற்சியளிக்கும் தேவைப்பாடு இருந்த போதிலும், நியாயசபையால் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. கடந்த 05 ஆண்டு காலப்பகுதியின் போது ரூபா 290,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 13,500 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 50,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதில் இரண்டு உத்தியோகத்தர்களை மாத்திரம் பயிற்சியளிப்பதற்கு ரூபா 6,000 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.